அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 19 / 2018
தேதி : 01.02.2018

மத்திய பட்ஜெட், சாமானியர்களுக்கான பட்ஜெட்டா
என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
நிறுவனத்தலைவர் ரா.சரத்குமார் அறிக்கை.

2018 – 19 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கை, நிதி அமைச்சரால் இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்ய முடியாத நிலையிலும், பணமதிப்பு இழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி போன்ற பொருளாதார சீர்த்திருத்த நடவடிக்கைகள் ஏற்படுத்திய பொருளாதார பின்னடைவை மத்திய அரசு எப்படி சரிசெய்யப்போகிறது என்ற எதிர்பார்ப்பிலும் இன்றைய பட்ஜெட் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

2016-17 ஆம் ஆண்டில் 4.9 சதவிகிதமாக இருந்த விவசாய வளர்ச்சி, 2017-18 ஆம் ஆண்டில் 2.1 சதவிகிதமாக வீழ்ச்சி அடையும் என்று கணிக்கப்பட்ட நிலையில், விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்பதை ஏற்கனவே வலியுறுத்தியிருந்தோம். அதன் அடிப்படையில், வேளாண்துறைக்கு கடன் உதவி கடந்த ஆண்டில் 10 லட்சம் கோடி ரூபாயாக இருந்ததை இந்த ஆண்டு 11 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் வேளாண் கடன்கள் 54% பெரு விவசாயிகள் மற்றும் பணக்கார விவசாயிகளுக்கே வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடன் உதவித் தொகை அதிகரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், சிறு,குறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு உரிய நேரத்தில், தேவையான கடனுதவி முழுமயாக கிடைப்பதை அரசு உறுதி செய்யவேண்டும். பயிர்களுக்கான குறைந்த பட்ச ஆதார விலை 1.5 மடங்கு அளவு வரும் காரிப் பருவத்தில் அதிகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதை 2 மடங்காக அதிகரிக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com



அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



ஊரக கட்டமைப்புகளுக்கு 14.34 லட்சம் கோடி ஒதுக்கீடு, கிராமப்புற நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு 2600 கோடி ஒதுக்கீடு, விவசாய சந்தை மேம்பாட்டிற்கு 2000 கோடி ஒதுக்கீடு, பசுமைத் தங்கம் எனப்படும் மூங்கில் மர வளர்ச்சிக்கு 1290 கோடி ஒதுக்கீடு, விவசாய உள்கட்டமைப்புகளுக்கு 22000 கோடி ஒதுக்கீடு என வேளாண்மை மற்றும் கிராமப்புற முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால் இவை விவசாயிகள் சந்தித்து வரும் பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு காணுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டம் மூலம் 10 கோடி ஏழை குடும்பங்களுக்கு இலவச மருத்துவ காப்பீடு வழங்குவதன் மூலம் உலகிலேயே மிக அதிக மருத்துவ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நாடாக இந்திய திகழப்போகிறது என்ற அறிவிப்பு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான இலவச சிகிச்சை வழங்குவதன் மூலம் “Making India Healthy” என்ற நிலையை அடையமுடியும். மேலும் 5 லட்சம் மருத்துவ மையங்கள், 3 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி, தூய்மை இந்திய திட்டத்தின் கீழ் 2 கோடி கழிப்பறைகள் போன்ற சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. உஜ்வாலா திட்டத்தின் கீழ் 8 கோடி ஏழைப் பெண்களின் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

ரயில்வே துறைக்கு தனியாக பட்ஜெட் இருந்தவரை விரிவாக திட்டங்கள் அறிவிக்கப்பட்டதை போன்று, தற்போது பொதுபட்ஜெட்டில் ரயில்வே பட்ஜெட் சேர்க்கப்பட்ட நிலையில், விரிவாக சொல்லப்படவில்லை 1.48 லட்சம் கோடி ரூபாய் ரயில்வே துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. 4000 கி.மீ புதிய ரயில் பாதை 18000 கி.மீ இரட்டை ரயில்பாதை, 36000 கி.மீ ரயில் பாதை புதுப்பித்தல் போன்ற அறிவிப்புகளில் எந்தெந்த மாநிலங்களில் எவ்வாறு இவை செயல்படுத்தப்படும் என்ற விரிவான விளக்கம் இல்லை.



எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



70 லட்சம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும், 50 லட்சம் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒரு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்ற வாக்குறுதியின் அடிப்படையில் இந்த 4 ஆண்டுகளில் உருவாக்கப்படாத வேலைவாய்ப்புகளோடு ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவு. கல்வி வளர்ச்சிக்கு 1 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில் விரிவான விளக்கங்கள் இல்லை. மேலும் பெட்ரோல் / டீசல் விலைகளைக் கட்டுப்படுத்த முறையான அறிவிப்புகளும் இல்லை. அதோடு கருப்பு பண ஒழிப்பு குறித்த அளவீடுகளும் தெரிவிக்கப்படவில்லை.

தனிநபர் வருமான வரி விலக்கு உச்ச வரம்பு அதிகரிக்கப்படாதது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. மேம்போக்காக, இந்த பட்ஜெட்டில் விவசாயம், சுகாதார மேம்பாடு, கட்டமைப்பு மேம்பாடு இவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக தோற்றம் அளிக்கிறது. ஆனால் இந்த அறிவிப்புகள் எந்த அளவிற்கு வெற்றிபெறும் என்பதை அறிவிக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதைப் பொறுத்தே, இந்த பட்ஜெட் சாமானியர்களுக்கான பட்ஜெட்டா என்பதை முடிவு செய்யமுடியும்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com